भारत का राजपत्र

# The Gazette of India

इந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्रांकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, गुरुवार, 9 जून 1994/1916 शाका

New Delhi, Thursday, 9th June, 1994/1916 Saga

புது தில்லி, 1994, ஜுன் 9, வியாழக்கிழமை/1916 சக

**Ministry of Law, Justice and Company Affairs**

(Legislative Department)

New Delhi

**சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்**

(சட்டமியற்றுத் துறை)

புது தில்லி

The translation in Tamil of the Judges (Protection) Act, 1985 (59 of 1985), The Indian Partnership Act, 1932 (9 of 1932), The Government Savings Bank Act, 1873 (5 of 1873), The Sale of Goods Act, 1930 (3 of 1930), The Public Provident Fund Act, 1968 (23 of 1968) are hereby published under the authority of the President and shall be deemed to be the Authoritative Texts thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

நீதிபதிகள் (காப்பளிப்புச்) சட்டம், 1985 (59/1985), இந்தியக் கூட்டாண்மைச் சட்டம், 1932 (9/1932), அரசாங்கச் சேமிப்பு வங்கிகள் சட்டம், 1873 (5/1873), சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 (3/1930), பொதுமக்கள் வருங்கால வைப்பு நிதியச் சட்டம், 1968 (23/1968) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத்தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு (அ)வின்படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[ Price Rs. 30-00

# சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930

(சட்ட எண் 3/1930)

[1930, மார்ச் 15]

சரக்குகள் விற்பனை தொடர்பான சட்டத்தைப் பொருள்வரையறை செய்வதற்கும் திருத்தம் செய்வதற்குமான ஒரு சட்டம்.

சரக்குகள் விற்பனை தொடர்பான சட்டத்தைப் பொருள்வரையறை செய்வதும் திருத்தம் செய்வதும் உகந்ததாக இருப்பதால், ஈங்கிதனால் பின் வருமாறு சட்டமியற்றப்படுகிறது :—

## அத்தியாயம் I

### முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், சரக்குகள் விற்பனைச் சட்டம், 1930 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, 1930 ஜூலை முதல் நாளன்று செல்லாற்றல் பெறும்.

2. இந்தச் சட்டத்தில், பொருளுக்கு அல்லது தறுவாய்க்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி,— பொருள் வரையறைகள்.

(1) ''வாங்குநர்'' என்பது, சரக்குகளை விலைக்கு வாங்குகிற அல்லது விலைக்கு வாங்குவதற்கு உடன்படுகிற ஆள் என்று பொருள்படும் ;

(2) ''ஒப்புவித்தல்'' என்பது, உடைமையை ஆள் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தம்விருப்பாக உரிமைமாற்றம் செய்தல் என்று பொருள் படும் ;

(3) வாங்குநர் சரக்குகளை எந்த நிலையில் ஒப்பந்தத்தின்படி ஒப்பு விப்புப் பெறுவதற்குக் கட்டுப்பட்டவராவாரோ அந்த நிலையில் அவை இருக் கும்போது, அவை ''ஒப்புவிக்கத்தக்க நிலை''யில் இருப்பதாகச் சொல்லப் படும் ;

(4) ''சரக்குகளின் உரிமைமூல ஆவணம்'' என்பது, கப்பல் சரக்குப் பட்டியல், கப்பல் சரக்கு ஒப்புவிப்பு உரிமைச் சீட்டு, பண்டகசாலை காப் பாளரின் உறுதிச்சான்று, கப்பல் சரக்கு மேடைக்குரியவரின் உறுதிச் சான்று, இருப்பூர்தியப் பற்றுச் சீட்டு, சரக்குகளை ஒப்புவிப்பதற்கான உரிமைச் சீட்டு அல்லது அனுப்பாணை மற்றும் சரக்குகளின் உடைமை அல்லது ஆளுகையின் மெய்ப்பிப்பாக வழக்கமான வணிக நடைமுறையில் பயன்படுத் தப்படுகிற பிற ஆவணம் எதையும் அல்லது அதனை உடைமையில் கொண் டிருப்பவருக்கு அதில் சொல்லப்பட்டிருக்கும் சரக்குகளை மேற்குறிப்பு வாயி லாகவோ ஒப்புவிப்பு வாயிலாகவோ உரிமைமாற்றம் செய்வதற்கு அல்லது பெற்றுக்கொள்வதற்கு அதிகாரமளிக்கிற, அல்லது அதிகாரமளிப்பதாகப் புலப்படுகிற பிற ஆவணம் எதையும் உள்ளடக்கும் ;